**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.23/2020 தேதி- 22.09.2025
(P.W.1) - ஜெயராஜ்

குறுக்கு விசாரணை

1. வழக்கு பட்டிகை சொத்து அரசு புறம்போக்கு என்றால் சரிதான். என் முதல் விசாரனை வாக்குமூலத்தில் என் தந்தையான காலம்சென்ற ராஜையன் புதிய புல எண்.6/3 -ல் 75 செண்ட் நிலத்தை 25.04.1940-ல் இருந்து கைவசம் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்ற சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை 1994-ல் B-memo வழங்கப்பட்டுள்ளது. பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு அரசால் மேற்சொான்ன 75 செண்ட் நிலத்தை கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ஆனால் 50 செண்ட் சொத்தை கையகப்படுத்தினார்கள். அரசு நிலம் கையகப்படுத்தியப்பிறகு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் ஏதும் என் அப்பா கொடுத்தாரா என்றால் இல்லை. தற்போது இந்த வழக்கு 24.640 செண்ட் சொத்திற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து அரசுக்கு புறம்போக்கு நிலம் என்பதால் அதை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்த என் அப்பா பெயருக்கு B-memo வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. B-memo வழங்கப்பட்ட பின் என் தந்தையோ, என் தந்தையின் வாரிசுகளோ எந்தவித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தில் ஒரு வீடு உள்ளது அதற்கு பஞ்சாயத்தில் எந்தவித அனுமதியும் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் 3-ஆம் பிரதிவாதி விஜயன் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மேற்சொன்ன விஜயனுக்கு பெரியார் சமத்துவபுரத்தில் கதவு எண்.13/206 என்ற எண் கொண்டு அரசால் வீடு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன விஜயனுக்கு அரசால் வீடு வழங்கப்பட்ட விவரம் பற்றி என்னுடைய பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் மேற்சொன்ன விவரம் என்னுடைய பிராதில் மற்றும் என் முதல் விசாரனையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. B-memo அடிப்படையில் பெறப்பட்ட மின் இணைப்போ, வீட்டுவரி ரசீதோ என்னுடைய உரிமையை நிலைநிறுத்தாது என்றால் சரியல்ல.வழக்கு பட்டிகை சொத்தில் புதிதாக கட்டப்பட்ட பேஸ்மெண்ட்டுக்கு எந்தவித அனுமதி பெறப்படவில்லை என்றால் சரிதான்.

என் குடும்பத்தை சார்ந்த இறந்த நபர்களை அடக்கம்செய்ய தனியாக கல்லறைத்தோட்டம் உள்ளது என்றால் இல்லை. என் அப்பா உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 6 பேர்கள் ஆகும்.

3. வழக்கு பட்டிகை சொத்தில் என் சகோதரர், தந்தை மற்றும் தாய் மட்டும் தான் அடக்கம் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் என் தாத்தா, பாட்டி, சித்தப்பா ஆகியோர்களை அடக்கம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் என்னுடைய சகோதரர், தாய் மற்றும் தந்தையை வழக்கு பட்டிகை சொத்தில் அடக்கம் செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு குடும்ப கல்லறை உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சொல்ல்ப்பட்டுள்ளவாறு வருவாய்துறை அதிகாரிகள் அவ்வப்போது வீட்டை காலிசெய்யவேண்டும் என்று பயம்முறியத்தாக என்னுடைய முதல் விசராரனையில் சொல்லியுள்ளநிலையில் எந்த தேதி, மாதம், ஆண்டு என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தேதி நினைவில்லை. மேற்சொன்ன விவரங்கள் சம்மந்தமாக புகார் ஏதும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து ஒரு புறம்போக்கு நிலம் என்பதால் தமிழ்நாடு நிலம் ஆக்கிரமிப்பு சட்டம் 1905-ன்படி 1-ஆம் பிரதிவாதிக்கு சட்டப்படி எங்களை வெளியேற்ற உரிமையுள்ளது என்றால் சரியல்ல.

4. என் தந்தையும், நானும் வழக்கு பட்டிகை சொத்தை 80 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணம் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தை தவிர மற்ற ஆவணங்கள் 2019 -ஆம் ஆண்டுக்கு பிறகு தான் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எந்தவித வழக்கு மூலமும் இல்லை என்றாலும் நான் வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதிக்கு செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி சொய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.